**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61/2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 12.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Ashokkumar(PW4) | வயது | 60 |
| தந்தை பெயர் | Sankar | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali | | |

முதல் விசாரணை

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 2ம் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளான சமரசம், லெனின், ஜெயக்குமார், அன்புகண்ணன் ஆகியோர்கள் யாரையும் எனக்கு தெரியாது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரையும் எனக்கு தெரியாது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி எனக்கு நினைவில்லை. இரவு 10.00 மணிக்கு மேல் நான் வேலைக்கு சென்று வீடு திரும்பியபோது தெருவில் பிரச்சினை ஏதோ நடந்ததாக எனது மனைவி என்னிடம் கூறினார் யார் யாருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு ஏதும் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 04.08.2021 அன்று மாலை 3.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது வீட்டின் எதிரே இருந்த காலி மனையில் ஜெய்கணேஷ் மற்றும் உமேஷ்பாண்டி ஆகியோர் பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் எனது தெருவில் வசிக்கும் சமரசம், லெனின், அன்புகண்ணன், ஜெபகுமார் ஆகியோர் அவர்களை பார்த்து நீங்கள் யார் என கேட்டு அவர்களது இடத்தில் வரக்கூடாது எனவும் மீண்டும் வந்தால் கொலை செய்துவிடுவோம் என தகாத வார்த்தையில் பேசி மிரட்டியதாகவும், அதன்பின்பு அவர்கள் 4 பேரும் உடைந்த கண்ணாடி துண்டுகளை கொண்டு உமேஷ்பாண்டி, ஜெய்கணேஷ் ஆகியோர்களை தாக்கியதாகவும் அதன்பின்பு எனது தெருவில் வசித்த செல்வராஜ் என்பவர் அளித்த தகவலின்பேரில் ஜெயராஜ் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்து காயமடைந்த நபர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை.

மறு விசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.

**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**<u>S.C. No. 61/2022</u>**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 12.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Nishanthi (PW5) | வயது | 36 |
| தந்தை பெயர் | Magesh | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali | | |

முதல் விசாரணை

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. வீட்டில் தான் வசித்து வருகிறேன். நான் வீட்டில் மினரல் வாட்டர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 2ம் எதிரி எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரிகள் சமரசம், ஜெயகுமார் மற்றும் அன்புகண்ணன் ஆகியோர்களையும் தெரியும். அவர்கள் எங்கள் வீட்டின் அருகில் வசித்து வருகிறார்கள். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர் யார் என்று எனக்கு தெரியாது. கடந்த 2021 ம் வருடம் தேதி எனக்கு நினைவில்லை மதிய வேலையில் எனது வீட்டின் அருகில் வசித்து வந்த எதிரிகளுக்கும் வேறு நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். குறிப்பாக யார் யாருக்கும் இடையே எவ்வாறு பிரச்சினை ஏற்பட்டது என்பது குறித்து விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 04.08.2021 அன்று மாலை 3.00 மணியளவில் நான் எனது வீட்டின் அருகே இருந்த காலி மனையில் இருந்து சத்தம்கேட்டதால் நான் வீடடில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது காலி மனையில் ஜெய்கணேஷ் மற்றும் உமேஷ்பாண்டி ஆகியோர் பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் எனது தெருவில் வசிக்கும் சமரசம், லெனின், அன்புகண்ணன், ஜெபகுமார் ஆகியோர் அவர்களை பார்த்து நீங்கள் யார் என கேட்டு அவர்களது இடத்தில் வரக்கூடாது எனவும் மீண்டும் வந்தால் கொலை செய்துவிடுவோம் என தகாத வார்த்தையில் பேசி மிரட்டியதாகவும், அதன்பின்பு அவர்கள் 4 பேரும் உடைந்த கண்ணாடி துண்டுகளை கொண்டு உமேஷ்பாண்டி, ஜெய்கணேஷ் ஆகியோர்களை தாக்கியதாகவும் அதன்பின்பு எனது தெருவில் வசித்த செல்வராஜ் என்பவர் அளித்த தகவலின்பேரில் ஜெயராஜ் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்து காயமடைந்த நபர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை.

மறு விசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.